செ.வெ.எண்: 20/2017 நாள்: 07.01.2017

# பத்திரிக்கை செய்தி

உலகத் தமிழர் அனைவராலும் கொண்டாடப்படும் திருவிழா தமிழர் திருநாள் எனப்படும் பொங்கல் பண்டிகை ஆகும். பொங்கல் திருநாளான அறுவடைத் திருநாள் உழவருக்கு நன்றி செலுத்தும் திருநாள் ஆகும். இறைவனுக்கும், இயற்கைக்கும், உழவருக்கும், உழவருக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளுக்கும் நன்றி நவில்கின்ற நாள் பொங்கல் திருநாள். பொங்கல் திருநாள் அறுவடைத் திருநாளாக உள்ளதால், தமிழர் கலாச்சாரத்தில் இந்த நாள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சிறப்பு வாய்ந்த தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், அரிசி குடும்ப அட்டையுடைய 5,24,142 குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் காவலர் குடும்ப அட்டையுடைய காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள 426 இலங்கை தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு ஒரு கிலோ பச்சிரிசி, ஒரு கிலோ சர்க்கரை, இரண்டடி நீள கரும்புத்துண்டுடன் தலா 20 கிராம் முந்திரி, திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படுகிறது. சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பினை தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் பகுதியில் உள்ள நியாயவிலைக்கடைகள் மூலம் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒம்/-சஜ்ஜன்சிங் ஆர்.சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

உண்மை நகல் / உத்தரவுப்படி

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.